பொதுத்தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் மாவட்டக் கலவி அலுவலர்

சேரன்மகாதேவி (இ) திருநெல்வேலி.

த.அ.உ.ச.ப.எண். 1369/அ3/2015, நாள்.26.03.2015.

பொருள்: தகவலறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ்– தகவல்கள் கோருதல் – சார்பு.

பார்வை: எஸ். பீட்டர் ராஜ், “ ஆவே மரியா” 9 அரிசிக் கடைத் தெரு, சாத்தான்குளம் தூத்துக்குடி மாவட்டம்.

---

பார்வையில் கண்ட மனுதாரர் திசையன்விளை உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளியில் ஆங்கில முதுகலை ஆசிரியர் பணியிடத்தில் 05.02.2014 முதல் நியமனம் செய்யப்பட்ட செல்வி .பு. மிக்கேல் ஜோஸ்பின் என்பாருக்கு இவ்வலுவலக கடிதம் மூ.மு.எண். 2017/ஆ3/2014 நாள் 13.06.2014ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட கோப்பு சார்பாக கீழ்க்கண்ட விவரங்களை வேண்டியுள்ளார்.

1. மேற்காண் நியமனத்திற்கு ஒப்புதல் பெற பள்ளி நிர்வாகம் அனுப்பிய கருத்துருவின் நகலினை முழுவடிவில் தருக
2. மேற்காண நியமன ஒப்புதல் சார்பாக பள்ளித் தாளாளர், தலைமை ஆசிரியர், கண்காணிப்பாளர் மற்றம் சம்பந்தப்பட்ட ஆசிரியர் அளித்திருக்கும் அனைத்து விவரங்கள் மற்றும் உறுதி மொழிகளின் நகலினை தருக.
3. மேற்காண் நியமன ஒப்புதல் சார்பாக சம்பந்தப்பட்ட கோப்பில் உள்ள அலுவலக குறிப்புகள் மற்றும் கூடுதல் விவரங்கள் கேட்ட கடித நகல்கள் அதற்கு நிர்வாகம் அளித்த விவரங்கள் மற்றும் விளக்கக் கடிதங்களின் நகல்கள் அனைத்தையும் முழுவடிவில் தருக.

மேற்படி பள்ளி சிறுபான்மைப் பள்ளி என்பதற்கான ஆதாரத்தினை அனுப்பி அதில் எந்த பக்கத்தில் எந்த பாராவில் அல்லது இப்பள்ளியை நடத்தும் நிர்வாகம் சிறுபான்மை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுக.

மேற்படி மனுதாரர் மூன்றாம் நபர் சார்பான தகவல்களை கேட்டுள்ளார். எனவே மேற்படி நபருக்கு உரிய தகவல்களை வழங்குவதற்கு தாங்களுக்கு ஏதும் ஆட்சேபனை ஏதும் இருந்தால் அதனை உடன் இவ்வலுவலகத்திற்கு எழுத்து பூர்வமாக தெரிவித்திட அறிவிக்கப்படுகிறது.

பொதுத்தகவல் வழங்கும் அலுவலர்
மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்,
சேரன்மகாதேவி (இ) திருநெல்வேலி.

பெறுநர்

1. கண்காணிப்பாளர், ஆர்.சி.பள்ளிகள், ஆயர் இல்லம், கதீட்ரல் அஞ்சல், தூத்துக்குடி மாவட்டம்.
2. செல்வி – பு. மிக்கேல் ஜோஸ்பின், ஆங்கில முதுகலை ஆசிரியர், உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளி, திசையன்விளை.
3. தலைமை ஆசிரியர் மற்றும் கடிதத் தொடர்பாளர், உலக இரட்சகர் மேல்நிலைப்பள்ளி, திசையன்விளை.